### ‘நீட்’ தேர்வுக்கு கண்காணிப்பு அதிகாரி நியமிப்பதா?

# பா.ஜ.க.வின் ‘பி’ டீமாக செயல்படுகிறது த.வெ.க. அரசு!

## ‘நீட்’ தேர்வால் சேலத்தில் தற்கொலை செய்து கொண்ட மாணவிக்கு அஞ்சலி செலுத்தி ஜெ.வீரமணி பேட்டி!

சேலம், ஜூன் 22-

நீட் தேர்வினால் தமிழகத்தில் மாணவ - மாணவியர்கள் தற்கொலை செய்து கொண்டு வரும் நிலையில் த.வெ.க. அரசு நீட் தேர்வு கண்காணிப்பு அதிகாரி நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் பா.ஜ.க.வின் பி டீமாக த.வெ.க. அரசு செயல்படுவதை காட்டுகிறது என்று ‘நீட்’ தேர்வால் சேலத்தில் தற்கொலை செய்து கொண்ட மாணவியின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தபின் கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி குற்றச்சாட்டினார்.

நீட் தேர்வு அச்சத்தினால் சேலம் மாவட்டம் வெள்ளாளபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிகா என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் உயிரிழந்த மாணவியின் இல்லத்திற்கு சேலம் மாவட்ட



திமுக செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம், கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள், மாணவரணி நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் நேரில் சென்று உயிர் இழந்த மாணவியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அவரது பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து தி.மு.க. சார்பில் ஒரு லட்ச ரூபாய் நிதியுதவி அளித்தனர்.

முன்னதாக மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வெள்ளாளபுரம் பேருந்து நிறுத்தம் பகுதியில் இருந்து அமைதி ஊர்வலம் சென்றனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கழக மாணவரணிச் செயலாளர் ஜெ.வீரமணி, எந்த நோக்கத்திற்காக நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதாக பா.ஜ.க. அரசு கூறியதோ அதற்கு நேர் மாறாக தகுதி இல்லாதவர்கள் மருத்துவம் படிக்க வழிவகை செய்யும் வகையில் நீட் தேர்வு பல்வேறு குளறுபடிகளை முறைகேடுகளை ஏற்படுத்தி உள்ளதாகவும், இதனை ரத்து செய்திட வேண்டும் என்று தி.மு.க. அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த பின்னரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனை செயல்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டிய அவர், தமிழகத்தில் நீட் தேர்வால் பல உயிர்கள் பலியாகி வரும் நிலையில் த.வெ.க. அரசு நீட் தேர்வை கண்டிக்காமல் நீட் தேர்வை கண்காணிக்க அதிகாரி நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் அதிகாரிகளை நியமித்ததன் மூலமாக பாஜகவிற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும் பா.ஜ.க.வின் B டீமாக த.வெ.க. அரசு செயல்படுகிறது என்று குற்றம் சாட்டினார். மேலும் தமிழகத்தில் மாணவர்களின் நலனின் அக்கறை செலுத்தாத ஆட்சியாக இந்த ஆட்சியை கண்டித்து திமுக மாணவரணி மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பினர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்திட உள்ளதாகவும் கழக மாணவர் அணிச் செயலாளர் ஜெ.வீரமணி தெரிவித்தார்.

மாணவரணி மாநில துணை செயலாளர் தமிழரசன் உள்பட மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள், ஒன்றிய மற்றும் பகுதி அமைப்பாளர்கள் என பலரும் உடன் இருந்தனர்.

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

நசுக்கும் செயலாகும். இது நல்லதொரு ஆக்கப்பூர்வமான சட்டமன்ற ஜனநாயகத்திற்கு உகந்தது இல்லை.

‘மாற்றம்’ என்ற சொல்லை மையமாக வைத்துத் தேர்தலைச் சந்தித்தவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் குரலை நசுக்குவதுதான் அவர்கள் செய்ய நினைக்கும் மாற்றமா? மக்கள் பிரதிநிதிகளின் பேச்சை மறைப்பது மக்களையே அவமானப்படுத்துவது ஆகும்.

இந்த அரசு வெளிப்படைத் தன்மை உடைய அரசு என்ற பொருள்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை பேசிய நிலையில், இப்போது அதற்கு முரணாக அவை விவாதங்களை, குறிப்பாக எதிர்க்கட்சியினரின் விவாதங்களை, வாக்களித்த மக்கள் தெரிந்துகொள்ள விடாமல் செய்வது ஜனநாயகத்தையே இருட்டில் தள்ளுவதற்குச் சமம்.

**ஊடகங்களுக்கு செய்திகளை வழங்க மறுப்பதா?**

மேலும், ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப் போற்றப்படும் ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்க மறுப்பதும், அரைகுறைச் செய்திகளை அளிப்பதும், “நாங்கள் தருவதை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும்” என்று சொல்வதும் பாசிச நடவடிக்கைகள் ஆகும்.

**நேரலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திடுக!**

ஒரே நேரத்தில் சட்டசபை, மக்கள் பிரதிநிதிகள், ஊடகங்கள் ஆகிய அனைத்தையும் அவமானப்படுத்தும் செயல் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன். வரும் திங்கட்கிழமையன்று (22.06.2026) எதிர்க்கட்சித் தலைவரான நானும், பிற தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் உரையாற்ற உள்ளதால், தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை நேரலை செய்வதற்குத் தங்களுக்கு உள்ள பேரவைத் தலைவர் அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் சட்டமன்றம் கூடுவதற்கான அர்த்தமே இல்லாமல் போய்விடும்; மக்கள் அளித்த வாக்குக்கே மரியாதை இல்லாமல் போய்விடும். சட்டமன்றத்தையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் அவமானப்படுத்தும் இதுபோன்ற செயல்களை இனியும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

# ‘நீட்’ எதிர்ப்பு - மாணவர் அமைப்பினர் ஆர்ப்பாட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

நீட் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி கண்டன முழக்கமிட்டனர். கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தியும் கண்டன முழக்கமிடப்பட்டது. மேலும், இந்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், சொல்லுங்க CM Sir… நீட் தேர்வில் உங்க நிலைப்பாடு என்ன?… நீட் தேர்வை எப்போது தடுத்து நிறுத்துவீர்கள் என்றும் முழக்கமிட்டனர்.

**திண்டுக்கல்!**

இதேபோன்று, நீட் தேர்வுக்கு எதிராக திண்டுக்கலில் போராட்டத்தில் ஏராளமான மாணவ அமைப்பினர் பங்கேற்றனர். திண்டுக்கல் தபால் நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாணவர்களின் வாழ்க்கையில் விளையாடும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக, குண்டுகட்டாக தூக்கிச்சென்று கைது செய்தனர்.

### சட்டமன்றத்தில் வாய் திறந்து பேசாத

# முதல்வருக்கு முட்டுக்கொடுத்துப் பேசும் எம்.எல்.ஏ.க்கள் - முதல்வரின் பேச்சை கேட்க ஆவல்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 22-

சட்டமன்றத்தில் வாய் மூடி மவுனம் காக்கும் முதல்வர் விஜய் வாய்திறந்து பேசமாட்டாரா? என்றும் முதல்வருக்கு பதில் முட்டுக் கொடுத்து பேசும் எம்.எல்.ஏ.க்கள் குறித்தும் ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஆளுநர் உரையுடன் துவங்கியது. முதல் நாள் கூட்டத்தில் தமிழ்த் தாய் வாழ்த்தை தொடர்ந்தும், பேரவைக்கூட்டம் முடிந்தும் என இருமுறை தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. மரபை மீறிய இச்செயல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசுக்கு தவெக அரசு அடிபணிந்து போவதையே இது காட்டுகிறது என கட்சிகள் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதில் இருந்து நாள்தோறும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்தவண்



தினகரன்

ஜூன் 20, 2026 சனிக்கிழமை

வாயை திறங்க சி.எம்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஆளுநர் உரையுடன் துவங்கியது. முதல்நாள் கூட்டத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்தும், பேரவைக்கூட்டம் முடிந்தும் என இருமுறை தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. மரபை மீறிய இச்செயல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசுக்கு தவெக அரசு அடிபணிந்து போவதையே இது காட்டுகிறது என கட்சிகள் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதில் இருந்து நாள்தோறும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. பிரசார காலக்கட்டத்தின்போதும், திருச்சி நன்றி அறிவிப்பு கூட்டத்திலும், திமுகவை கடுமையாக விமர்சித்தார் முதல்வர் ஜோசப் விஜய். ஆனால், கோவை சிறுமி உள்பட எண்ணற்ற சிறுமிகள், இளம்பெண்கள், மூதாட்டிகள் என பலரும் பாலியல் வன்கொடு

ணம் உள்ளன. பிரசார காலக்கட்டத்தின்போதும், திருச்சி நன்றி அறிவிப்பு கூட்டத்திலும், திமுகவை கடுமையாக விமர்சித்தார் முதல்வர் ஜோசப் விஜய்.

ஆனால், கோவை சிறுமி உள்பட எண்ணற்ற சிறுமிகள், இளம்பெண்கள், மூதாட்டிகள் என பலரும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாவது தொடர்கதையாக இருந்தும், முதல்வர் ஜோசப் விஜய், இதுதொடர்பாக பொதுஇடங்களில் பேட்டியோ அல்லது உரிய விளக்கமோ தரவில்லை. ‘முதல்வர் பேட்டியளிக்க வேண்டும் என்பது மரபு இல்லை; சட்டங்களில் ஒன்றும் குறிப்பிடவில்லை’ என ஒரு சில அமைச்சர்களே முட்டுக் கொடுத்து வருகின்றனர். மாநிலத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, குற்றச் சம்பவங்கள் குறித்து தொடர்பாக முதல்வராக இருக்கும் ஒருவர் வாய் திறக்க வேண்டாமா?

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை துவக்க விழா மற்றும் கொல்லூர் மூகாம்பிகை கோயிலில் கார் ஓட்டியதை ரீல்ஸ் எடுத்து, சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதா பெருமை? அண்ணனாக, தம்பியாக தமிழ்நாட்டுப் பெண்களை பாதுகாப்பேன் என மேடைகளில் முழங்கி விட்டு, தற்போது மிக அமைதியாக இருப்பதன் காரணம் என்ன சிஎம் சார்? 2, 3 அடியை வில்லனிடம் வாங்கி விட்டு, பிறகு காத்திருந்து திருப்பி அடிக்க இது சினிமா அல்ல… உடனுக்குடன் அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை எப்போது உணரப்போகிறீர்கள்? இதை உணர்த்தும் வகையில்தான் நேற்று முன்தினம் சட்டப்பேரவைக்கு திமுக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட திமுக எம்எல்ஏக்கள், ‘வாயை திறங்க சிஎம்’ என்ற பேட்ஜ் அணிந்து வந்தனர்.

நேற்றைய பேரவை கூட்டத்தில் கூட திமுக எம்எல்ஏ ஆஸ்டின், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். இந்த துறையை கையில் வைத்திருக்கும் முதல்வர் ஜோசப் விஜய், இதுதொடர்பாக பதிலளித்திருக்க வேண்டும். ஆனால், துறைக்கு தொடர்பே இல்லாத பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் இதற்கு பதிலளித்திருக்கிறார். முதல்வர் பதில் கூறவில்லையே என்றால், விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, ‘முதலமைச்சருக்கு எப்போது பேச வேண்டும்; எப்படி பதிலளிக்க வேண்டும் என்று தெரியும்’ என முட்டு கொடுக்கிறார். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியின் குரல், மக்களின் குரல் என்பதை முதல்வர் இதுவரை உணரவில்லையா?

அதேபோல பேரவை நிகழ்வுகளை எங்கள் ஆட்சியில்தான் நேரடியாக ஒளிபரப்பு செய்கிறோம் என தம்பட்டம் அடித்த தவெக அரசு, பதவியேற்பு விழா உள்ளிட்ட நிகழ்வுகளை தடையின்றி ஒளிபரப்பியது. ஆனால், நேற்றைய நேரலை ஒளிபரப்பு திடீரென ஏன் ரத்தானது? இதுவும் தவெகவின் ரீல்ஸ் உருட்டுதானா என எதிர்க்கட்சியினர், பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இனியாவது, நீண்ட மவுனம் கலைத்து, தன்னை நம்பி ஓட்டுப் போட்ட மக்களுக்காக வாய் திறந்து பதில் சொல்வாரா முதல்வர் ஜோசப் விஜய்?

இவ்வாறு முதல்வரின் பேச்சை சட்டமன்றத்தில் கேட்க ஆவலாக உள்ளதாக ‘தினகரன்’ நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

## கஜூர்ல பத்து நிமிஷம்



கொளத்தூர்ல
அஞ்சு நிமிஷம் பேசுனதுக்கே
என்ன நடந்தது தெரியுமான்னு
கேட்கிற லாட்டரிக்காரர்..

கரூர்ல
பத்து நிமிஷம்
பேசுனதால
என்ன நடந்தது
எப்படி "ஓடுனது"ங்கிற உண்மையை சொல்லலாமே.

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் - ‘இந்தியா’ என்பதற்கு மாற்றாக ‘பாரத்’ என்ற சொல்லை பயன்படுத்தும் பல்கலைக் கழகங்கள்!

புதுடெலி, ஜூன் 22-

ஆர்.எஸ்.எஸ். உடன் தொடர்புடைய அமைப்புகளின் தூண்டுதல்களால், பாஜக ஆளும் மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள், தங்களது மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் பட்டப் படிப்புகளுக்கான சான்றிதழ்களில், இந்தியா என்ற சொலுக்கு மாற்றாக பாரத் என்ற சொல்லை பயன்படுத்தத் தொடங்கி உள்ளன.

இந்தியா என்ற பெயரை அகற்றிவிட்டு, அதற்கு மாற்றாக பாரத் என்ற சொல்லை மட்டுமே நாட்டிற்கான அதிகாரப்பூர்வ பெயராகப் பயன்படுத்த வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள தேவி அகில்யா விஸ்வவித்யாலயா பல்கலைக்கழகம், சிந்த்வாராவில் உள்ள ராஜா சங்கர் ஷா பல்கலைக்கழகம், சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூரில் அமைந்துள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் விஸ்வ வித்யாலயா மற்றும் குரு காசிதாஸ் விஸ்வ வித்யாலயா மத்தியப் பல்கலைக்கழகம், உத்தரப் பிரதேச மாநிலத்தின் பிரயாக்ராஜ் நகரில் உள்ள பேராசிரியர் ராஜேந்திர சிங் பல்கலைக்கழகம், உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள பல பல்கலைக்கழகங்கள், தங்களது மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் பட்டப் படிப்புகளுக்கான சான்றிதழ்களில், இந்தியா என்ற சொலுக்கு மாற்றாக பாரத் என்ற சொல்லை பயன்படுத்தத் தொடங்கி உள்ளன.

தேசிய உணர்வையும், பாரம்பரிய அறிவு முறைகளையும் வளர்க்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறும் பல்கலைக்கழகங்கள் தேசியக் கல்விக் கொள்கையை திணிக்கும் வகையில் செயல்படுகின்றன.

இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள ராணி துர்காவதி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இன்றையதினம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் அனைத்துப் பட்டங்களிலும் ‘இந்தியா’ என்பதற்குப் பதிலாக ‘பாரத்’ என்ற பெயர் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். ராமச்சந்திரன்
### ஜூன் 22 (2025)



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**2002 முதல் தொடர்ந்து 4 முறை இலத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பின்னர் இலத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**2001ல் பரமேஷ்வரமங்கலம் ஊராட்சி மன்ற தலைவராகவும் – 2006ல் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவராகவும் – 2011 மற்றும் 2021ல் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘நீட்’ கொடுமை: ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# கழக மாணவரணி அடலேறுகள் - பல்லாயிரக்கணக்கில் அணி திரள்வீர்!